அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)
ISSN: 2582-399X

காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :26 April 2025
கோட்டை:7 வாயில்:26 ஏப்ரல் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine
Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University,
Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005,
Uttar Pradesh,India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

Dr SILLLALEE A/L S.KANDASAMY

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr KANDASAMY

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

Dr S. KARUMPAAYIRAM

Junior Research officer,Central Institute of Classical Tamil,
Chennai-600100

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study
in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

---

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
இதழாக்கம்
திரு ப. ஜெயகிருஷ்ணன்
முதன்மை ஆசிரியர்
முனைவர் பிரியாகிருஷ்ணன்
+917299587879
www.aranejournal.com
aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



அகத்தினுள்

தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரான தெய்வச்சிலையாரின் பிற உரை நுட்பங்கள்
முனைவர்.வி.சேகர்

தொல்காப்பியப் புறத்திணையியல் வெட்சித் திணையில் பாட வேறுபாடுகள்
கு.செந்தமிழ்செல்வி

எட்டுத்தொகை - 'குறுந்தொகை'யில் செலவழுங்கல்
ஆ.கவிதா

சங்க இலக்கிய அகநூல்களில் உடன்போக்கு
மா.மகேஸ்வரி

சங்ககால அலைகுடிகளானப் பாணர்-கூத்தர் ஒப்பீடு
ப. நந்தினி

களவுத்துறைத் தலைவன் கூற்றுகளில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும்
திருமதி.கோ.சரண்யா

புறநானூற்றில் வல்லாண்முல்லைத் துறை உணர்த்தும் போர்
ப.சிவாஜி

பதினெண்கீழ்க்கணக்கு 'திரிகடுகத்தில் கல்விச் சிந்தனைகள்
இரா.தீபலெட்சுமி

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் 'திரிகடுகம்' வலியுறுத்தும் புணை நெறி
இரா.ஹேமலதா

சிலம்பில் அரசியல்
மு.உமாமகேஸ்வரி

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

அகத்தினுள்

திருநாவுக்கரசரின் இறைநெறிக் கொள்கைகள்
முனைவர் ச.வைத்தீஸ்வரன்

திருமூல நாயனாரின் இல்லற அறங்கள்
முனைவர் ஹ.விஜயலட்சுமி

பெரியபுராணம்: நாயன்மார்களின் அறச் சிந்தனைகள்
ப.பிரபு

திருமாலின் அவதாரங்களும் குறியீடுகளும்
சா.ஜனார்த்தனன்

சிற்றிலக்கியங்களில் வைகுந்த வழிபாட்டு முறைகள்
திருமதி நா.நித்யா

நடன குஞ்சிதபாதம் எழுதிய மதுரைக் கதம்பத்தில் காணலாகும் உத்திகள்
கி. ராஜ்குமார்

தர்காவும் விளிம்புநிலை மக்களும்
முனைவர் மௌ.அஸ்கர் அலி

இந்தியத் தத்துவத்தின்வழி இலக்கியத்தில் இருத்தலியல்
முனைவர் நா. ஜிதேந்திரன்

சங்கதி புதினத்தில் பெண் பாத்திரப்படைப்புகள் ஓர் ஆய்வு
ரா.சந்தியா

ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் 'மணவிழவுச் சடங்குகள்'
ரா.ஹேமா சிவகா

கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்
இரா.கலாவதி

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

அகத்தினுள்

இலக்கியங்களில் தகவல் தொடர்பியல்
ந.மஞ்சுளா

மகாபரதச்சூடாமணியில் கைச் செயற்பாடுகள்
பத்மினி. S

EASY LEARNING TECHNIQUES
PROF. Dr. Er. S. HARI PRASAD

Exploring the Lesson planning process of Teachers Teaching Mathematics in Grade 9 In Batticaloa District Schools
Kanapathipillai Gnanaretnam

A Comparative Study Of Formal And Non-formal Education Systems
Shiyani Thevaruban

நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு
முனைவர் வி. ஜெயஸ்ரீ பிரியதர்ஷினி1, எல். பஷீரா பேகம்2

நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு

The Architecture of Thirunallūr Kalyānasundharēswarar Attic (Māda) Temple in Thiruvarur District, Tamil Nadu
P.PRAVEENKUMAR

Educational and Intervention, Impact a case study on Nilgiris and Chennai Slums
Dr. S.Udhaya Kumar.

தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள்
முனைவர் செ. சாந்தி

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

தமிழ்

களவுத்துறைத் தலைவன் கூற்றுகளில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும்

A Comparative Study on Man's love life among Tholkaappiyar & Thiruvalluvar

ஆய்வாளர்

திருமதி.கோ.சரண்யா,
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி),
திருவானைக்கோவில், திருச்சி மாவட்டம்-05
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

நெறியாளர்

முனைவர் க.சுந்தரமூர்த்தி, *ஆய்வு நெறியாளர்,*

உதவிப்பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர்,
ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி),
திருவானைக்கோவில், திருச்சி மாவட்டம்-05
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

RESEARCH SCHOLAR
Mrs.G.SARANYA,
PART TIME PH.D RESEARCH SCHOLAR, SRIMAD ANDAVAN ARTS AND SCIENCE COLLEGE (AUTONOMOUS),
THIRUVANAIKOVIL, TRICHY DISTRICT-05 (AFFILIATED TO BHARATHIDASAN UNIVERSITY)
ORCID: https://orcid.org/ 0000-0001-9676-8177

RESEARCH GUIDE
Dr.G.SUNDARAMOORTHY,

ASSISTANT PROFESSOR & HAED OF THE DEPARTMENT, TAMIL,SRIMAD ANDAVAN ARTS AND SCIENCE COLLEGE (AUTONOMOUS),THIRUVANAIKOVIL, TRICHY DISTRICT-05
(AFFILIATED TO BHARATHIDASAN UNIVERSITY)
ORCID: https://orcid.org/0000-0002-5495-6118

ஆய்வுச்சுருக்கம்

நமது தமிழ் மொழி உலகின் மிகப் பழமையான மற்றும் பாரம்பரிய மொழிகளில் ஒன்றாகும். தொல்காப்பியம், திருக்குறள் ஆகிய இரண்டு நூல்களும் தமிழ் நிலத்தின் இரு கண்கள். இக்கால ஆண்மகன் அலைபேசியில் தனது காதலியைத் தொடர்பு கொண்டு பேசுகின்றான். ஆனால், நேரில் பார்த்து காதல் கொண்டு பேசும் மகிழ்ச்சிக்கு எதுவும் ஈடாகாது. அது கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் இருந்தாலே வெற்றியை அடையும். இல்லையென்றால், இன்னல்களுக்கும் சிக்கல்களுக்கும் தான் வழிவகுக்கும். தொல்காப்பியர், தலைவன் காதல் வாழ்க்கையில் பேசும் திறத்தை நயம்பட எடுத்துக் கூறியுள்ளார். அதுபோல் திருவள்ளுவரும் இலக்கண அமைப்போடு அழகுற கூறியிருப்பது உற்றுநோக்கத்தக்கது. தொல்காப்பியர் கூறிய பொருளதிகார அகம்சார் களவுத்துறைத் தலைவன் கூற்றுகளில் அதன் இலக்கண அமைப்போடு திருவள்ளுவர் தனது நூலில் எவ்வெவ் இடங்களில் எல்லாம் எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதை இனம் காணுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

திறவுச் சொற்கள் : தொல்காப்பியம், திருக்குறள், ஒப்பாய்வு முறை,களவு,கற்பு

Abstract:

Our Tamil Language is one of the oldest and traditional language in the world. Tholkaappiyam and Thirukkural these two books are the two eyes of Tamil land. Today's man talks to his girlfriend on the phone. But, nothing compares to the joy of talking with love in person. It can only be achieved with dignity and control. Otherwise it will lead to troubles and problems. Tolkappiyar has beautifully captured the power of speaking in a man's love life. Similarly, what Thiruvalluvar has said is interesting.The purpose of this research is to find out how Thiruvalluvar has handled the concepts of inner life of man with its grammatical structure at various places in his book.

Keywords *: Tholkaappiyam, Thirukkural, Comparative study,kalavu,karpu*

முன்னுரை

தமிழினத்தின் மிகப் பெரும் போற்றுதலுக்குரிய இலக்கணம் தொல்காப்பியம். அதே போல் இலக்கியத்தை எடுத்துக் கொண்டால் உலகப் புகழ் பெற்ற பொதுமறையாக விளங்கக்கூடிய, உலக அளவிலேயே மொழிபெயர்ப்பில் இரண்டாவது இடத்தில் இருக்கக் கூடிய திருக்குறளை எள்ளளவும் ஐயமின்றி கூறலாம். இலக்கண, இலக்கிய உலகில் தனிப்பெரும் இடத்தைப் பெற்றவை இந்த இரண்டு நூல்களும் என்று சொல்லலாம். அந்த அளவு இவ்விரு நூல்களும் கற்றோறிடம் சிறப்பு பெற்ற நூலாக விளங்குகின்றன என்றால் அது மிகையில்லை. படிக்காத பாமர மக்களும் கூட தனது வாகனங்களில் திருக்குறளைப் பதிவிட்டுக் கொள்கின்றனர் என்றால் அது பரவலாக உலகில் பேசப்படுகிறது என்பதனால் தான். அது போன்று வள்ளுவர் முன் தோன்றிய தொல்காப்பியர் கூறிய இலக்கண வழியில் தான் நாம் இன்னமும் இலக்கிய உலகில் நடைபோட்டுக் கொண்டிருக்கின்றோம். அவர் கூறிய இலக்கணத்தைப் பின்பற்றியே இலக்கிய உலகம் சுழன்று கொண்டிருக்கின்றது. அவர் தம் கருத்துகளை இலக்கண வழியில் வள்ளுவர் எவ்வாறு இரசனையுடன் கையாண்டுள்ளார் என்பதனையே இவ்வாய்வு விளக்க முற்படுகின்றது.

களவுத்துறைகளில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும்

தொல்காப்பியர் தம் களவியல் துறைகளில் ஐம்பத்தொரு நூற்பாக்களைப் புனைந்துள்ளார். தொல்காப்பியர் உணர்த்த முயன்ற களவியல் நூற்பாச் செய்திகளை எழுபது குறட்பாக்களில் வள்ளுவர் படைக்க முயன்றுள்ளார். தொல்காப்பியர் களவியல் செய்திகள் அனைத்தையும் உள்வாங்கி வள்ளுவர் தம் களவியல் முறைகளை ஏழு அதிகாரங்களில் எழுபது நூற்பாவாக நமக்குத் தந்துள்ளார். இதில் உள்ள தலைவன் கூற்றுத்துறைகள் மட்டும் நம் ஆய்வு எல்லையாகின்றது.

> **”அன்பு என்றும் நிரந்தரமானது. பசுமையான நினைவுகளோடு வலம் வருவது. அன்பு செலுத்தி உறவாடுபவர்கள் சில காலம் பிரிந்து மீண்டும் சந்திக்கும் போது அவர்களைக் கண்ட அளவில் அவர்கள் கண்ணில் துளிர்க்கும் கண்ணீரே அதனை வெளிப்படுத்தும்” *(சிங்கார வேலன்.பா.பக்.144)***

இது தலைவனுக்கும் தலைவிக்குமான அன்பை வெளிப்படுத்தி நிற்கும் வாசகங்களாக அமைகின்றன. இதில் குறிப்பிடப்படும் அன்பு என்னும் சொல்லை தலைவன் வழி தலைவியின்பால் உண்டாகும் உணர்வைக் கூற்றுமொழியாக இலக்கணத்தோடு பொருத்திப்பார்த்து துறை வாரியாக சொல்ல முனைவதே இதன் குறிக்கோள் ஆகும்.

தலைவன் கூற்றுத் துறைகள்

தொல்காப்பியர் கூறிய அகத்துறைகளையே நாம் இன்னமும் பின்பற்றி வருகின்றோம். அதில் எவ்வித மாற்றமும் நாம் இன்றளவிலும் செய்வது கிடையாது. மனித வாழ்க்கையில் அகமும் புறமும் ஆகிய நிலைகள் மிகவும் முக்கியமானவை. அதனை அழகுற தனது நூற்பாக்களில் விளக்கியுள்ளமை பிரம்மிக்கத்தக்கது. குறிப்பாக, ஒரு வீட்டின் தலைவன் எவ்வாறு இருக்க வேண்டும் அவனுக்கான பொறுப்பு என்ன? என்பதை தனது துறைகள் வாரியாகவே அழகாக விளக்கியிருப்பார் தொல்காப்பியர். காதல் கொள்ளும் ஒரு ஆண்மகன் எவ்வெவ் இடங்களில் நெறி தவறாது ஒழுக வேண்டும் என்பதையும், தலைவியை நினைந்து நெக்குருகும் பாங்கினையும் அவர்தம் உள்ளக் குறிப்பில் வெளிப்படும் உணர்வுகளையும் அழகுற எடுத்துக்காட்டி இருப்பார். அவ்வாறாக களவுத் துறைகளில் தலைவன் பேசும் இடங்களை எல்லாம் ஒவ்வொரு துறைகளாக விளக்கி இருப்பார். அத்துறைகளோடு திருவள்ளுவரும் தனது குறட்பாக்களை வடித்திருக்கிறார் என்பதே இத்தலைப்பு விளக்க முற்படுகின்றது.

களவுத்துறைகளில் தலைவனானவன் தலைவி, தோழி, பாங்கன் ஆகியோரிடம் கூற்று நிகழ்த்தும் இடங்கள் அகத்துறைகளாகின்றன. இதனை,

> **”மெய்தொட்டுப்பயிறல் பொய்பாராட்டல்**
> **இடம்பெற்றுத் தழாஅல் இடையூறு கிளத்தல்” (தொல்.பொருள்.நூ-103)**

எனத் தொடங்கும் நூற்பா குறிப்பிடுகின்றது.

மெய்தொட்டுப்பயிறல்

தொல்காப்பியர் கூறிய மெய்தொட்டுப்பயிறல் என்னும் துறையினை வள்ளுவர் தம் புணர்ச்சி மகிழ்தல் என்னும் அதிகாரச் செய்திகளில் முன்மொழிந்துள்ளார் என்பது உற்றுநோக்கத்தக்கது.

இயற்கைப் புணர்ச்சியில் தலைவன் தலைவியைத் தீண்டுகின்றான். அப்பொழுது அவன் பேசுவது போல வள்ளுவர்,

> **”கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்**
> **ஒந்தொடிக் கண்ணே உள” (குறள் -1101)**

என்னும் குறட்பாவைப் படைத்துள்ளார். அதாவது, கண்ணால் பார்த்து, காதால் கேட்டு, நாக்கால் உண்டு,மூக்கால் நுகர்ந்து, மெய்யால் தீண்டி உண்டாகும் ஐம்புலன்களால் வரக் கூடிய இன்பம் அனைத்தும் ஒளி உடைய வளையல் அணிந்த தலைவியிடம் உண்டாவதாக குறிப்பிடுகிறார். இஃது தொல்காப்பியர் கூறிய மெய்தொட்டுப்பயிறல் என்னும் துறையோடு பொருந்தி வருகிறது.

தீராத்தேற்றம்

தலைவன் தலைவியை இயற்கைப் புணர்ச்சியில் சந்தித்த பொழுதும் அது தீராமல் தெளிவு பெறாமலிருப்பது தீராத்தேற்றம் என்னும் துறையாகும். இதனைத் தொல்காப்பியர் தலைவன் கூற்றுத்துறையாக விளம்புகிறார். இத்துறைக்குச் சான்றாக,

”நின்மார் படைதலின் இனிதாகின்றே
நும்மில் புலம்பினும் உள்ளு தொறும் நலியும்” (குறுந்தொகை ,பா.58)

எனத் தொடங்கும் அகநானூற்றுப்பாடல் அமைகின்றது.

இடந்தலைப்பாட்டில் சந்திக்கின்ற பொழுது தலைவன் கூற்று நிகழ்த்துகிறான். அதனை,

”பிணிக்கு பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து” (குறள் — 1102)

என்னும் குறட்பாவில் வள்ளுவர் கூறியிருக்கின்றார். இதில் தலைவியால் வந்த நோய்க்கு அவள் மட்டுமே மருந்தாக முடியும் என்று புலம்புவதாக வள்ளுவர் தலைவனின் தீராத தேற்றத்தை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளமைக் குறிப்பிடத் தகுந்தது.

தலைவியின் தோள்களை எப்பொழுது கூடினாலும் விரும்பிய நேரத்தில் விரும்பிய பொருள்கள் கிடைத்தது போல இன்பம் செய்கின்றது என்பதனை,

”வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்” (குறள் — 1105)

என்னும் குறட்பாவில் வள்ளுவர் கூறியிருப்பார். இஃது தலைவியின் கண் கூடி மகிழ்ந்தாலும் இன்னும் தீராத தேற்றத்தினை எடுத்துரைக்கிறது என்பதாக தொல்காப்பியரின் வழி மொழிந்திருக்கின்றார். இது போல அதிகாரத் தலைப்புகளும் குறட்பாவின் பொருளும் வேவ்வேறாக இருந்தாலும் அதனுள் குறிப்பால் தொல்காப்பியர் மொழிந்த துறைகளை எடுத்து இயம்பியுள்ளார் வள்ளுவர் என்பது இங்ஙனம் தெளிவாகின்றது.

பெற்ற வழி மகிழ்தல்

இடந்தலைப்பாட்டில் தலைவியைச் சந்தித்த இன்பத்தைத் தலைவன் பெறுகின்றான். அப்பொழுது அவன் மனதில் தோன்றும் ஆனந்தப் பெருக்கையே பெற்ற வழி மகிழ்தல் என்னும் துறை என்கின்றோம்.

”ஒடுங் கீரோதி ஒண்ணுதற் குறுமகள்
நறுந்தண் நீர ளாரணங் கினளே
இணையள் என்றவட் புனையளவு அறியேன்
சிலமெல் லியவே கிளவி

அணைமெல் லியல்யா முயங்குங் காலே"(குறுந்தொகை,பா.எ-70)

என்கிறக் குறுந்தொகைப்பாடல் தலைவன் புணர்ச்சியால் மகிழ்ந்து தலைவியைப் பற்றிக் கூறி வியந்ததைப் பெற்றவழி மகிழ்தல் துறையாக நுவலுகின்றது. இத்துறையினை வள்ளுவர் தம் குறட்பாக்களில் புகுத்தியிருப்பது இங்கு ஒப்பிடத்தக்கது.

தொல்காப்பியர் கூறிய பெற்ற வழி மகிழ்தல் என்னும் துறையினை வள்ளுவர்,

"தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு" (குறள் — 1103)

என்கிற குறட்பா வழி எடுத்தியம்புகின்றார். இதில் வள்ளுவர், திருமாலின் வீட்டுலகை விட தலைவியின் தோள்களைத் தழுவுதலே இன்பம் பயப்பதாக இருக்கும் என்று தன்னை இடித்துரைத்த தோழனிடம் தலைவன் கூறுவதாக குறிப்பிட்டிருப்பார். இஃது தலைவியைப் பெற்ற வழி அவளை நினைந்து மகிழ்ச்சி கொள்ளும் துறையாகிய தொல்காப்பியர் கூறிய பெற்ற வழி மகிழ்தல் என்னும் துறையோடு ஒத்தமைவதைக் காணலாம்.

"நீங்கின் தெறூஉம் குறுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்" (குறள் — 1104)

"உறுதோ றுயிர்த்தத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தின் இயன்றன தோள்" (குறள் — 1106)

என்கிற குறட்பாக்கள் வழியும் தலைவன் தலைவியைப் பெற்ற வழி வரும் மகிழ்ச்சியினை வள்ளுவர் படைத்திருப்பார்.

வரைதல் வேண்டி தோழி செப்பிய வழி புரைதீர் கிளவி புல்லிய எதிர்வு

தலைவியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டி தோழியால் கூறப்படும் குற்றமில்லாத சொல்லைக் கேட்டு, தலைவன் மறுமொழிந்து கூற்று நிகழ்த்துவதையே தொல்காப்பியர் வரைதல் வேண்டி தோழி செப்பிய வழி புரைதீர் கிளவி புல்லிய எதிர்வு என்னும் துறையாக குறிப்பிட்டுள்ளார். இதனை,

"நல்லுரை இகழ்ந்து புல்லுரை தாஅய்
பெயல்நீர்க் கேற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி
அரிதவா றுற்றனை நெஞ்சே நன்றும்
பெரிதால் அம்மநின் பூசல் உயர்க்கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇ கேட்குநர் பெறினே" (குறுந்தொகை ,பா.எ-120)

என்பது தலைவன் எதிர்படுத்து மொழ்தல் துறைக்குச் சான்றாகிறது. அஃதாவது, வரைந்து கொள்ள வேண்டி தோழி எடுத்துக் கூறிய பின்னும் தலைவன் மீண்டும் களவு வழியான சந்திப்பு வேண்டும் என்கிறான் தலைவன்.

தோழி வரைந்து கொள்ள வேண்டி கூறியும் தலைவன் களவு எதிர் நோக்குவதனை வள்ளுவர் தம் குறட்பாக்களில் கையாண்டுள்ளார்.

”வீழும் இருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முடக்கு” (குறள் — *1108*)

என்னும் இக்குறட்பாவானது கையைத் தளர விடாது ஒருவரை ஒருவர் விரும்பும் இடைவிடாத சேர்க்கை இருவர்க்கும் இனிதாகும் என்று களவொழுக்கம் நீளவேண்டி தலைவன் கூறுவதாக அமைந்தது.

பிரிந்த வழிக்கலங்கல்

தலைவியைச் சந்தித்தல் என்பது பகலாயினும் இரவாயினும் குறுகிய காலமே நிலைக்கும். ஏனென்றால், களவு வாழ்க்கையில் நீண்டநேரம் தலைவன் தலைவியைச் சந்திக்க இயலாது. அப்படி இருக்கும் சூழலின் தலைவன் தலைவியினை விட்டுப் பிரிந்தாக வேண்டும். அச்சூழலில் பிரியும் பொழுது தலைவன் கலங்கி நிற்கின்றார். இதனையே தொல்காப்பியர் **பிரிந்த வழிக் கலங்கல்** என்கின்றார். இதனை,

”சீயங்கொ லோவெனெத் தெவ்வன்ற வாணன்றென
மாறைவையைத்
தோயங்கோ லோவெனு நேயநம் பால் வைத்துச்
சோலை மஞ்ஞை
யாயங்கொ லோவெனு மாயத்துள் ளாளிவ்
வரிவை யென்ன
மாயங்கொ லோநெஞ்ச மேமணம் போலிங்கு
வந்துற்றதே” (தஞ்சை வாணன் கோவை,பா-30)

தலைவன் தலைவியைப் பிரிந்தவழிக் கலங்கி தன் நெஞ்சிற்குச் சொல்லியதை தஞ்சைவாணன் கோவை விளக்குகின்றது. இது போன்று பிரிந்த வழிக் கலங்கல் துறையினை தெய்வப்புலவர் கீழ்க்கண்டவாறு தம் குறட்பாவில் எடுத்தியம்புகிறார்.

”அறிதோறு அறியாமை கண்டற்றால் காலம்
செறிதோறும் சேயிழை மாட்டு” (குறள் — *1110*)

என்னும் குறளில் தலைவியைப் புணர புணர அறியாமையோடு புதிதாக நூலைக் கற்பது போல பிரிந்த வழிக் கலங்கி தலைவன் உரைப்பது போன்று கூறியுள்ளார் வள்ளுவர். இஃது புணர்ச்சி மகிழ்தல் அதிகாரக் குறட்பாவாகும்.

மற்றுமொரு அதிகாரமான காதல் சிறப்புரைத்தலில் தொல்காப்பியர் கூறிய களவிலக்கணத் துறையான பிரிந்த வழிக் கலங்கலை காட்டியுள்ளார் பொய்யாமொழியார்.

இதனை,

”உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு” (குறள் — 1122)

என்னும் குறட்பாவில் உணர்த்துகிறார். அதாவது, உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு போல எனக்கும் என்னுடைய தலைவிக்குமான நட்பு இருப்பதாக தலைவன் தலைவியைப் பிரிந்த வழிக் கலங்கிக் கூறுகிறான். இது பிரிந்த வழிக் கலங்கல் துறையினை எடுத்தியம்புகின்றது.

”கருமணியில் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற் கில்லை யிடம்” (குறள் — 1123)
”வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கும் இடத்து” (குறள் — 1124)

இக்குறட்பாக்களிலும் வள்ளுவர் பிரிந்தவழிக் கலங்கல் துறையினை எடுத்து மொழிந்துள்ளார் என்பது இச்சான்றுகள் மூலம் தெளிவாகின்றது.

மேலும் காதலரின் இரு மனங்களும் இருக்க வேண்டிய தன்மை குறித்து ஆய்வு செய்த முனைவர் ப.செல்லம்மாள் அவர்கள்,

> **”ஒத்த அன்பு, ஒத்த உணர்ச்சி, ஒத்த கடமை கொண்டு திகழ வேண்டும் என்று கூறி அதன் மூலம் குடும்ப ஒருமைப்பாட்டையும் சமத்துவத்தையும் பேசியுள்ளதைப் பார்க்க முடிகின்றது.ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டை நெறிவகுத்துச் செல்வதனைத் திருக்குறளில் பார்க்க முடிகின்றது” (திருக்குறள் ஆய்வுக் கோவை, பக்.197)**

இங்கு இவர் கூறியிருப்பது களவு வாழ்க்கைக்கும் பொருத்தப்பாடாக அமைகின்றது. ஒத்த அன்பு, ஒத்த காதல் கொண்டவரால் மட்டுமே பிரிந்த வழிக் கலங்க முடியும் இதன் மூலம் தெளிவாகின்றது.

நன்னயம் உரைத்தல்

தலைமகளது அழகினை நயம்பட உரைப்பதை நன்னயம் உரைத்தல் என்கின்றார் தொல்காப்பியர். இதனை,

”சேரல் மடவன்னஞ் சேரல் நடையொவ் வாய்
சேரல் மடவன்னஞ் சேரல் நடையொவ் வாய்
ஊர்திரை வேலி யுழக்கித் திரிவான்பின்
சேரல் மடவன்னஞ் சேரல் நடையொவ் வாய்” (சிலப்பதிகாரம் :கானல்வரி — 23)

என்கிற சிலப்பதிகாரச் செய்யுள் தலைவியின் நடையழகை உணர்த்துகின்றது.

திருவள்ளுவர் தொல்காப்பியர் மொழியும் நன்னயம் உரைத்தலை நலம் புனைந்து உரைத்தல் என்னும் அதிகாரத்தில் எடுத்தாண்டுள்ளார். தலைவன் பாங்கனுக்குத் தலைவியின் நலனைக் குறிப்பிடுவதனை,

”முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு” (குறள் — 1113)

என்கிற குறட்பா வாயிலாக அறிய முடிகின்றது.

மடல்மா கூறல்

தலைவியைச் சந்திக்காத, சந்திக்க சூழல் ஏற்படாத நீண்ட இடைவெளி இடத்து தலைவன் தோழியிடம் கூற்று நிகழ்த்துவான். அப்பொழுது, தலைவி தன்னை சந்திக்க முடியாது போனால் நிச்சயம் மடல் ஏறுவேன் என்று தோழியிடம் தலைவன் கூறுகிறான். மடல் ஏறுதல் என்பது அக்காலத்தில் இழுக்கு உடையதாகவும், அது ஒரு ஆண்மகனின் காதல் துன்பத்தின் உச்ச உணர்வு என்றும் கொள்ளலாம். அப்படியான காதல் துன்பத்தின் உச்ச உணர்வினை தொல்காப்பியர் கூறிய இலக்கண வழி திருவள்ளுவரும் அறைந்துள்ளார். இதனையே,

` **”காமம் உழந்து வருந்தினார்க் கேம**
மடலல்ல தில்லை வலி” (குறள் — 1131)

என்னும் குறட்பா உணர்த்துகின்றது. இதில் தோழியானவள் எடுத்துக் கூறியும் மடல் ஏறுவேன் என்று தலைவன் கூறுகின்றான். இஃது, மடல்மா கூறும் துறையோடு ஒப்பிட்டுக் காணப்படுகின்றது.

] நாணமும் அறிவும் உடையவர் இதைச் செய்ய மாட்டார் எனத் தோழிக் கூற, அதற்குத் தலைவன் கூறும் திறத்தை கீழ்க்கண்ட குறள் சுட்டுகின்றது.

> **”நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்**
> **காமுற்றார் ஏறும் மடல்” (குறள் — 1133)**

மடல் விலக்கியத் தோழிக்கு தலைவியை நினைந்து என் கால்கள் நாணத்தையும் துறந்து மடல் ஏறத் துணிகின்றன என்பதனை,

> **”நோனா உடம்பும் உயிரும் மடலேறும்**
> **நாணினை நீக்கி நிறுத்து” (குறள் — 1132)**

என்னும் குறள்வழி அறியலாம். இங்ஙனம் பெண்ணுக்கு மட்டுமின்றி நாணம் என்பது ஆண்மகனுக்கும் உரிய ஒன்று என்று அவர்தம் குறட்பாக்களில் எடுத்து மொழிந்துள்ளார் வள்ளுவர். இதனை ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கோட்பாடாக ஹெலென் ஜெபா ஜோஸ் தனது ஆராய்ச்சியில் கூறியுள்ளார்.

> **”தொல்காப்பியர் காலத்தில் பலபெண்டிர் மணம், பரத்தையர் நாட்டம் ஆகியவை சமுதாய ஏற்புடையனவாக இருந்தன. இதற்கு மாறாக ஒருவனுக்கு ஒருத்தி தான் என்னும் கோட்பாட்டை வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார்” (ஹெலன் ஜெபா ரோஸ்,பக்.167)**

என்பது அவர் கூறிய திருக்குறள் கோட்பாட்டு வரிகள் ஆகும்.

சில இடங்கள் அகத்துறைகளோடு ஒப்புமை பொருந்தி வராவிடினும் தொல்காப்பியர் கூறும் அகம் சார்ந்த பொது நூற்பாக்களோடு ஒத்து அமைகின்றது. இதனை,

> **”கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்**
> **பெண்ணிற் பெருந்தக்க தில்” (குறள் — 1137)**

என்கிற குறள் வழியாக அறியலாம். இதில், கடலைப் போல காமமான நோய் வந்தும் பெண் மடலேறாமல் பொறுத்துக்கொள்ளுவாள். அத்தகையவள் போல் இப்பூவுலகில் வேறொரு பிறவியைப் பார்க்க முடியாது என்கிறார் திருவள்ளுவர். இஃது, தொல்காப்பியர் கூறிய கீழ்க்கண்ட நூற்பாவோடு ஒத்தமைகின்றது.

> **”எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்**
> **பொற்புடை நெறிமை இன்மையான” (தொல்.பொருள்,நூ-38)**

இந்நூற்பாவானது, பெண் மடல் ஏறும் பாங்கினைப் பெறாதவள் என்பதனை விளக்குகின்றது.

முடிவுரை

தலைவன் என்பவன் வீட்டிற்கும் நாட்டிற்கும் ஆற்ற வேண்டிய பொறுப்புகள் அதிகம் உடையவன். அவன் கற்பு வாழ்க்கையில் மட்டுமல்லாது களவு செய்யும் காதல் வாழ்க்கையிலும் நெறியுடன் இருக்கத் தவறக் கூடாது. இதனை, குறிப்பாக இக்கால சந்ததியினர் புரிந்து கொள்ளும் பாங்குடன் ரசனையாக தொல்காப்பியர் வடித்த களவுத் துறை தலைவன் கூற்றும்

திருவள்ளுவர் அதற்கு குறட்பாக்கள் இயற்றியிருக்கிற பாங்கும் எண்ணி எண்ணி வியக்கத்தக்கது. தொல்காப்பியர் ஏறத்தாழ 33 துறைகளைத் தலைவன் கூற்றுத்துறைகளாக குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் மெய்தொட்டுப்பயிறல், தீராத்தேற்றம், பெற்ற வழி மகிழ்தல், பிரிந்தவழிக் கலங்கல், வரைதல் வேண்டித் தோழி செப்பிய புரைதீர் கிளவி புல்லிய எதிர்வு, நன்னயம் உரைத்தல் மடல்மா கூறுதல் ஆகிய துறைகளில் குறட்பாக்களை வள்ளுவர் வெவ்வேறு அதிகாரத்தலைப்புகளுக்குள் இயற்றி அடக்கியிருப்பது இவ் ஆய்வு மூலம் தெளிவாகிறது எனலாம்.

துணைநூற்பட்டியல்

[1] இளம்பூரணர் (உ.ஆ). *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* சாரதா பதிப்பகம், சென்னை — 14 பதிப்பு — 2003

[2] கதிர் முருகு. முனைவர் (உ.ஆ). *தஞ்சைவாணன் கோவை.* மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, பதிப்பு — 2009

[3] கேசிகன் புலியூர் (உ.ஆ). *அகநானூறு.* சாரதா பதிப்பகம், சென்னை — 14, பதிப்பு — 2006

[4] கேசிகன் புலியூர் (உ.ஆ). *குறுந்தொகை.* சாரதா பதிப்பகம், சென்னை — 14, பதிப்பு — 2006, பா-70

[5]கோவை மணி மோ.கோ.முனைவர்(ப.ஆ).*”திருக்குறள் ஆய்வு மாலை”.* கௌமாரா மடாலயம், கோவை ISBN:978-81-7090-435-9, பதிப்பு 2023

[6] சண்முகம் பிள்ளை. மு. *”**திருக்குறள் ஆராய்ச்சி-** 1 யாப்பு அமைதியும் பாட வேறுபாடும்”.* சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, பதிப்பு- 1971

[7]சிங்கார வேலன்.பா.முனைவர். *” திருக்குறளில் ஆளுமைச் சிந்தனைகள்”. சான்லாக்ஸ் ஆய்விதழ் பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ்,* E-ISSN: 2582-2810 ,DOI: https://doi.org/10.34293/ tamil.v8i4 .7772, தொகுதி.8, வெளியீடு:4 ஏப்ரல் 2024,

[8]செல்லம்மாள் கோ.ப.முனைவர். *”திருக்குறள் ஆய்வுக் கோவை தொகுதி 1”.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2001

[9] செயபால். முனைவர் (உ.ஆ). *அகநானூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை — 98,பதிப்பு - 2008

[10]சொக்கப்ப நாவலர் (உ.ஆ). *தஞ்சைவாணன் கோவை.* பாரி நிலையம், பிராட்வே, சென்னை — 108, பதிப்பு - 2000

[11] மாணிக்கனார்.வ.சுப. *தமிழ்க்காதல்.* மெய்ய்ப்பன் பதிப்பகம், சென்னை-18, பதிப்பு — 2010

[12] பத்மநாபன் (தொ.ஆ).”*குறள் களஞ்சியம்*”. கொற்றவை வெளியீடு, சென்னை -17, பதிப்பு — 2009

[13] பரிமேலழகர்(உ.ஆ). *திருக்குறள் மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், சென்னை — 14, பதிப்பு — 2021

[14] ஜெகதீசன் (ப.ஆ). ”*குறுந்தொகை ஆய்வுக்கோவை*”. *மூன்றாம் தொகுதி, சங்க இலக்கிய ஆய்வு நடுவம்,* மதுரை-02, பதிப்பு — 2011

[15]ஹெலென் ஜெபா ரோஸ். ”*திருக்குறளில் அகத்திணைக் கூறுகள்*”. *சர்வதேச தமிழ் ஆராய்ச்சி இதழ்,* தொகுதி. 4 எண். S-13 (2022): தொகுதி 4, வெளியீடு S-13, ஆண்டு 2022, DOI: https://doi.org/10.34256/irjt224s1323

REFERENCES

[1] Ilampuranar .Tolkappiyam porulathigaram. Saradha Padhippagam, Chennai — 14, Edition — 2003

[2]] Kathir Muruku.Dr . Thanjaivanan kovai. Meenakshi Padhippagam, Pudukottai, Edition — 2009

[3] Kesigan Puliyur.Dr . Akananooru. Saradha Padhippagam, Chennai — 14, Edition — 2006

[4] Kesigan Puliyur. Kurunthokai. Saradha Padhippagam, Chennai — 14, Edition — 2006,

[5] Kovai mani.M.K.Dr.“*Thirukkural aayvu maalai*”. Kowmara madalayam, Kovai, Edition— 2023 ISBN:978-81-7090-435-9,

[6] Shanmugampillai.M. “Thirukkural Araaychi— 1, Yaapamaithiyum Paada Verupaadum”. Chennai University, Chennai, Edition — 1971

[7] SingaraVelan.P. “Thirukkuralil Aalumai Sinthanaigal”. *Shanlax International Journal*,Volume: 8 Issue: 4 Month: April Year: 2024 P-ISSN: 2454-3993 E-ISSN: 2582-2810, DOI: https://doi.org/10.34293/

[8] Chellammal.K.V. “Thirukkural Aayvu Kovai Volume — 1”. Manivaasagar Padhippagam, Chennai, Edition — 2001

[9] Jeyabal. Dr . Akananooru. New Century Book House, Chennai — 98, Edition — 2008

[10] Sokkappa Navalar , Thanjaivanan kovai, Pari Nilayam, Broadway, Chennai — 108, Edition — 2000

[11] Manikanar.Va. Subha, Tamilkadhal. Meiyappan Padhippagam, Chennai-18, Edition — 2010

[12] Padmanabhan . "Kural kalanjiyam". Kotravai Padhippagam, Chennai-17, Edition — 2009

[13] Parimelazagar. Tirukkural moolamum uraiyum. Saradha Padhippagam, Chennai — 14, Edition — 2021

[14] Jagatheesan. "Kurundhogai aayvu". Volume III, Sanga Ilakkiya aayvu Naduvam, Madurai-02, Edition — 2011

[15] Helen Japa Rose. "*Thirukkuralalil Agathinai Koorugal*". *International Research Journal of Tamil,* Vol. 4 No. S-13 (2022): Volume 4, Issue S-13, Year 2022, DOI: https://doi.org/10.34256/irjt224s1323

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2025, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com